உ

ஞான பைரவர் துணை

வட கோண்டாவில்

# ஸ்ரீ ஞானபைரவ ஸ்வாமி பேரில்

## (1) திருவூஞ்சல்

## (2) கீர்த்தனைகள்



இஃது
கோண்டாவில் வடக்கு

**ஸ்ரீ ஞானபைரவ ஸ்வாமி**

தேவஸ்தான வெளியீடாக
வெளியீடப் பெற்றது

10. 02. 1998.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஞானபைரவர் துணை

வடகோண்டாவில்

ஸ்ரீ ஞானபைரவ ஸ்வாமி பேரில் பாடப்பெற்ற

# திருவூஞ்சலும் கீர்த்தனைகளும்

இயற்றியவர்

"இயலிசைவாரிதி"

"கலாரத்னா"

"கலாபூஷணம்"

பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர் அவர்கள்

இசையமைத்துப் பாடியவர்

கலைமாமணி

கலாரத்னா

டாக்டர் சீர்காழி கோ. சிவசிதம்பரம் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

இரண்டாவது குரு மஹா சந்நிதானம்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியது

அன்புடையீர்!

வடகோண்டாவில் ஸ்ரீ ஞானபைரவர் ஸ்வாமி பேரில், பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள் இயற்றிய 'திருவூஞ்சல்' பிரதியைப் படித்தோம். பக்தி மணம் கமழவும், தத்துவக் கருத்துக்கள் பொலிந்து விளங்கவும் பாடியிருப்பது ஐயர் அவர்களுக்கே உரிய தனிநடை எனலாம். தமிழுலகு அவர்களை நன்கறியும்.

இதுவொரு தெய்வ கைங்கரிய மானதினால் சைவ அன்பர்களின் ஆதரவு வேண்டற்பாலது. விழாக்காலங்களில் இவ்வூஞ்சற் பாக்களை இசை பிறழாது ஓதுதல் வேண்டும். தெய்வ உணர்வு, தெய்வ நம்பிக்கை வளரவேண்டும். இவ்வாலயத் திருப்பணிகளில் ஈடுபாடுடைய அன்பர்கள் அனைவருக்கும் பைரவப் பெருமான் திருவருளால் நலம் யாவும் பெருகுமென உளமார ஆசீர்வதிக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

துர்க்கா துரந்தரி
**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**
வழங்கியது

ஊஞ்சல் என்பது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் ஒன்று. இது பெரும்பாலும் தெய்வத்தின் மீது பாடப்படுவதால் "திருவூஞ்சல்" எனப் பெயர் பெறுகிறது. இறைவனை ஊஞ்சலில் வைத்துப் பாடி அசைத்து அக் காட்சியைக் கண்டு பேரானந்தம் அடைவார்கள் பக்தர்கள். உற்சவகாலப் பூர்த்தி தினங்களிலும் மணவாளக்கோலத் திருவிழா நடைபெறுங் காலங்களிலும் திருவூஞ்சல் விழா நடைபெறுவது வழக்கம். இம் மரபை வளர்க்கும் பொருட்டு கோண்டாவில் வடக்கு ஞான வைரவப் பெருமானுக்குத் திருவூஞ்சற் பாட்டு யாக்கப் பெற்றுள்ளது. ஸ்ரீ வீரமணி ஐயர் பக்திப் பாடல்கள் இயற்றுவதற்கே அவதாரம் எடுத்த ஒரு புண்ணியப் பிறவி. அவருடைய சொற்களும், பொருளும், சுவையும், ஓசையும் பின்னிப் பிணைந்தவை. இவற்றைப் பாடி அனுபவித்து உள்ளமெனும் ஊஞ்சலில் வைரவப் பெருமானை இருத்தி உய்வடையவேண்டும்.

தங்கம்மா அப்பாக்குட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ ஞானபைரவர் துணை

வடகோண்டாவில

# ஸ்ரீ ஞானபைரவ ஸ்வாமி பேரில் திருவூஞ்சல்

## காப்பு

சீர்பூத்த ஈழவள யாழ்ப்பா ணத்தில்
செழுங்கலையின் அருள் பெருகு வடபால் மேவும்
பேர்பூத்த கோண்டாவிற் பதியில் வந்தே
பெருங்கருணைப் பேரொளியாய் அருளும் ஐயன்
பார்பூத்த பைந்தமிழின் ஊஞ்சல் வைகிப்
பரன்ஞான பைரவரும் இனிதே ஆடக்
கார்பூத்த நிறத்தழகன் அரசடி வாழ்
கணபதியின் செஞ்சரணம் காப்ப தாமே!

## நூல்

பூமலரும் வேதம்நாற் கால்க ளாகப்
புகலரிய உபநிடதம் விட்ட மாக
நாமலரும் கலைஞானம் கயிற தாக
நளினமிகு ஓங்காரம் பீட மாகத்
தேமலரும் தீந்தமிழின் ஊஞ்சல் மேவித்
தெய்வீகப் பேரொளியாய் அமர்ந் தருளி
நாமகள் வாழ் கோண்டாவில் வடபால் மேவும்
ஞானபை ரவஸ்வாமீ ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோனமிகு பக்தியெனும் கால்நி றுத்தி
முறையாய்ஐம் புலன்களையோர் விட்ட மாக்கி
ஞானமிகு நாற்கரண வடங்கள் மாட்டி
ஞாலமதில் திருவருளாம் பலகை தேக்கி
வானவர்போல் சீவனவன் ஊஞ்ச லான
வளமான முத்தியதை அருளும் தேவா!
தேனலரும் வடகோண்டா வினிலே மேவும்
ஞானபை ரவஸ்வாமீ ஆடீர் ஊஞ்சல்.

விரித்தகதிர் மணிச்சடையும் வீசி ஆட
விளங்கிடுகூர்த் திரிசூலம் மிளிர்ந்தே ஆடத்
தரித்திடுமங் குசமாடத் துடியுமாடத்
தவழ்ந்திடுமுப் புரிநூலும் இசைந்தே ஆட
உரித்ததலைக் கபாலவணி யாரம் ஆட
உயர்நீறு அணிந்ததிரு மேனி ஆட
பெருத்ததலக் கோண்டாவில் வடபால் மேவும்
ஞானபை ரவஸ்வாமீ ஆடீர் ஊஞ்சல்.

முடியாடச் சடையாட முறுவல் ஆட
முண்டகத்தண் கரமாட முத்தீ ஆட
துடியாடக் குழையாடச் செவியு மாடத்
திசையாடத் திகழ்ந்திடுமட் சரங்கள் ஆட
வடிவேறு படையாடச் சூல மாட
வாளேந்து கரமாடக் கவச மாட
நெடுமால்வாழ் கோண்டாவில் வடபால் மேவும்
ஞானபை ரவஸ்வாமீ ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகனமா மலர்க்கழலின் மணிக ளாட
முத்திதரு அபயமொடு வரத மாட
வாகனசு வானமது குழைந்தே யாட
வடைமாலை திருமார்பில் நெகிழ்ந்தே ஆட
நாகவட நல்லரைஞான் நயந்தே ஆட
நளினமுகத் தாமரையில் அருளும் பூப்ப
மாகலைவாழ் கோண்டாவில் வடபால் மேவும்
ஞானபை ரவஸ்வாமீ ஆடீர் ஊஞ்சல்.

கானமெழு வீணையதைக் கரத்தி லேந்திக்
கலைமகள்வா கீஸ்வரியும் இசையும் பாட
மோனமஹா லக்ஷ்மியவள் பரத மாடி
முகுந்தனுடன் நின்புகழைப் பாடி ஏத்த
தேனலரும் மலர்க்கூந்தற் சிவகாமித்தாய்
தில்லைநட ராஜனென நின்னைப் போற்ற
தானருளும் கோண்டாவில் வடபால் மேவும்
ஞானபை ரவஸ்வாமீ ஆடீர் ஊஞ்சல்.

ஆணவத்தால் அகந்தைமிக அயனார் கொள்ள
அரியதலை கிள்ளியயன் அகந்தை தீர்த்தாய்
பேணவரும் இந்திரர்க்கே பெரும்பே றான
பேரருளின் பெருங்கரணைப் பேறு தந்தாய்
காணவரும் திருவாலங் காட்டில் காளீ
கண்டிடவே ஊர்த்துவமும் புரிந்தாய் தேவா
பூணுகலைக் கோண்டாவில் வடபால் மேவும்
ஞானபை ரவஸ்வாமீ ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனாம் ஞாயிறுவெண் குடையை ஏந்தச்
சுழன்றால வட்டத்தைத் திங்கள் தூக்க
நேரிழையாள் ரதியென்னும் செவ்வாய்க் கன்னி
நேயன்மன் மதன் கரும்பு தன்னைத் தாங்க
காரிகையாள் கலைச்செல்வி யாழன் போடு
கானம்பா டிட வெள்ளி ஆச னித்தே
பாரிலெழிற் கோண்டாவில் வடபால் மேவும்
ஞானவை ரவஸ்வாமீ ஆடீர் ஊஞ்சல்.

சந்நிதியில் நாடிவந்து உருகிப் பாடச்
சௌபாக்கியம் அருள்பவனே ஆடீர் ஊஞ்சல்
கன்னல்மிகு கனிகளொடு கழனிச் செல்வம்
களித்தோங்கச் செய்பவனே ஆடீர் ஊஞ்சல்
வன்னவளச் செல்வமெலாம் வாரி வாரி
வந்தார்க்குக் கொடுப்பவனே ஆடீர் ஊஞ்சல்
நன்னகராம் கோண்டாவில் வடபால் மேவும்
ஞானவை ரவஸ்வாமீ ஆடீர் ஊஞ்சல்.

முக்கண்ணன் மூலவனே ஆடீர் ஊஞ்சல்
முத்திக்கு நித்தியனே ஆடீர் ஊஞ்சல்
தக்கனையே வென்றவனே ஆடீர் ஊஞ்சல்
தளிர்ச்சூலக் கரத்தோனே ஆடீர் ஊஞ்சல்
அக்கமணி தரித்தவனே ஆடீர் ஊஞ்சல்
அண்டசரா சரத்தோனே ஆடீர் ஊஞ்சல்
நெக்குருகும் பக்தர்கள்சூழ் வடகோண் டாவில்
ஞானவை ரவஸ்வாமீ ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

அந்தணராம் வேதியரும் வாழி! வாழி!!
அறம்வாழி! சுரர்வாழி! அகிலம் வாழி!
சுந்தரஆ னினம்வாழி! மாரீ வாழீ!
செங்கோலின் மன்னவனும் வாழி! வாழி!
பைந்தமிழின் மங்கையரின் கற்பும் வாழி!
பரந்தாமன் லக்ஷ் மிசிவ காமி வாழி!
நந்தமிழின் கோண்டாவீற் றலமும் வாழி!
ஞானபை ரவஸ்வாமி வாழி! வாழி!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

தமருகம் தாங்கிய தளிர்கரா பராக்கு
தண்டலைக் கபால மணிவோய் பராக்கு
அமர்கோண் டாவிற் பதியே பராக்கு
அடர்திரி சூலப் படையோய் பராக்கு.

வாகனச் சுவானம் இவர்வோய் பராக்கு
வடைமா லைதனைப் புனைவோய் பராக்கு
மோகனப் புரிநூல் தரித்தோய் பராக்கு
மோனவே தியனே பரனே பராக்கு.

தாண்டவம் ஆடிய தற்பரா பராக்கு
தண்ணருள் ஈயும் பைரவா பராக்கு
மண்டலக் கோண்டா விற்பதீ பராக்கு
மகிதலம் போற்றும் மகிபா பராக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமாலையும் திரிசூலமும் தரித்தோய்
எச்சரிக்கை

தவழ்நான்முகன் தலைகொய்தவா தலைவா
எச்சரிக்கை

மலைமாபுஜத் திடத்தோள்வலி வீரா
எச்சரிக்கை

மதியாடிடும் சடையோய்அருள் வீரா
எச்சரிக்கை

படமாடிடும் பணிபூண்டிடும் பரனே
எச்சரிக்கை

பாதாம்புஜ நாதாபரா பதியே
எச்சரிக்கை

வடகோண்டாவில் தலமேவிய ஞானா
எச்சரிக்கை

வளர்வீணையில் வாகீஸ்வரி புகழ்வோய்
எச்சரிக்கை.

கனலேந்தியே துடிதூக்கிடும் கபாலீ
எச்சரிக்கை

கரிமாலவன் கஜலக்குமிக் கரசே
எச்சரிக்கை

மனமேவிய சிவகாமியின் நேயா
எச்சரிக்கை

மாபைரவ கோவேஅருள் மன்னா
எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

கருணைவடி வானவர்க்கு லாலி சுப லாலி
கபால மணிபவர்க்கு லாலி சுப லாலி
அருளை அள்ளித் தருபவர்க்கு லாலி சுப லாலி
ஆனந்த பைரவர்க்க லாலி சுப லாலி.

விரித்தசெஞ் சடையார்க்கு லாலி சுப லாலி
விஸ்வரூப பைரவர்க்கு லாலி சுப லாலி
உரித்ததலை ஏந்துவார்க்கு லாலி சுப லாலி
ஓங்கார பைரவர்க்கு லாலி சுப லாலி.

திரிசூலம் ஏந்துவார்க்கு லாலி சுப லாலி
திரிநயன முடையார்க்கு லாலி சுப லாலி
அரிவேதன் போற்றுவார்க்கு லாலி சுப லாலி
அருள்ஞான பைரவர்க்கு லாலி சுப லாலி.

## மங்களம்

ஸ்ரீஞான பைரவர்க்கு ஜெய மங்களம் — நித்ய
சீதளப்பொற் பாதருக்குச் சுப மங்களம்
பேரா யீரவருக்கு ஜெய மங்களம்
பெம்மான் திரிசூலர்க்கு சுப மங்களம்

செந்தழழின் மேனியர்க்கு ஜெய மங்களம்
செங்கமல நேத்திரர்க்கு சுப மங்களம்
செந்தமிழ்க்கோண் டாவிலுக்கு ஜெயமங்களம்
சுந்தர வடியருக்கு சுப மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : செஞ்சுருட்டி தாளம் : ஆதி

பல்லவி

செம்மணிச் செல்வனே நமஸ்காரம் – தேவா
அம்மணமாய் நிற்பதுனக்
காகுமோ சொல்லிடுவாய்

அநுபல்லவி

இம்மண்ணில் பக்தருக்கு
இறைஞ்சிடுவாய் பேரருளை
செம்மேனி உடுக்க நல்ல
சிவந்த பட்டுத் தரலாமா

சரணம்

கனல் தெறிக்க நீயின்று
கடுஞ்சினமும் கொண்டு அயன்
மனவகந்தை தீர்த்து அயன்
மண்டியிடச் செய்தனை
கனவில் வந்து காட்சி காட்டும்
கருணை வடிவழகனே !
உனக்கு நல்ல பஞ்சகச்ச
உடையணிகள் தரலாமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : ஹமீர் கல்யாணி தாளம் : ஆதி

பல்லவி

திருக்கொன்றல் பூச்சொரிய
பெரும் ஆலும் குடை பிடிக்க
அருள்பிரவா ஹமாக
அள்ளிச் சொரிவான் பைரவன்

அநுபல்லவி

வருகவென்றே தெய்வீக
வளைவு பக்தரை அழைக்கும்
பெருமணம் முல்லை வீசும்
திருத்தலம் கோண்டாவிலில்

சரணம்

உள்ளம் உருகி பக்தர்
உளமாரத் துதிபாட
அள்ளி அருள் சொரிந்திடுவான்
அய்யன் பைரவமூர்த்தி
தெள்ளு தமிழ்க் கோண்டாவில்
தெய்வீகக் கோயில் கொண்டான்
வெள்ளமாய் அருள் சொரிவான்
ஞானபைரவமூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : நாட்டை தாளம் : ஆதி

பல்லவி

அரசடி விநாயகன் சோதரனே – சரணம்
புரநகர்க் கோண்டாவில்
புரந்திடும் பைரவனே

அநுபல்லவி

கரமிலிர் சூலமும்
கபாலமும் ஏந்திடுவோய்
வரமருளி எமக்கு
வாழ்வு தருபவனே.

சரணம்

பிரமனின் அகந்தையைப்
போக்கிய தீரனே
சிரமதை கொய்தயன்
செருக்கடக்கியவனே
கரமலர் கூப்பி உன்னைக்
கருத்தில் வைத்தே துதித்தேன்
பரமசிவன் மைந்தனே
பதம் அருள்வாய் ஐயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : ஸரஸ்வதி                                                    தாளம் : ஆதி

பல்லவி

ஆயிரம் ஆயிரம் சங்கெடுத்து அபிஷேகம்
ஆனி உத்தரநாளில் ஆனந்தமாய் நாம் புரிவோம்

அநுபல்லவி

தோயும் பக்தியால் குளித்த
தேவஞான பைரவனே !
நீயே துணையன்றி வேறு
நீணிலத்தில் துணையுமுண்டோ ?

சரணம்

செருக்கு நிறைந்த அயன்
சிரந்தனை நீ கொய்தாய் !
உருக்கி மனத்தையெல்லாம்
உன்னடி சேர வைத்தாய்
பெருக்கும் கண்ணீர் சொரியப்
பெருமானே பாட வைத்தாய் !
அருட்கடலே சரணம்
அரும் ஞானபைரவனே !

அன்னை சிவகாமி நல்கும்
ஆசி வேண்டி ஆனி மாதம்
மின்னிடும் கேடகத்தில் வந்தே
மிளிரருள் ஆசி பெற்றாய் !
உன்னிதய பாசத்தால்
உல்லாசியும் ஆனிமாதம்
நின்னினிய வாசல் வந்தாள்
நீணிலக் கோண்டாவிலூரில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : புன்னாகவராளி தாளம் : ஆதி

பல்லவி

நின்னாபர ணப்பாம்புகள்
புற்றெடுத்தே வந்து
நின்னடி அருள் வேண்டி
நீள்படம் விரித்தாடும்

அநுபல்லவி

கன்னல் தமிழ்க்கோண்டாவில்
கவின் கோயில் கொண்டாய் தேவா !
நின்னையன்றி இந்த
நிலத்தில் துணையுமுண்டோ ?

சரணம்

அயனவன் அகந்தையை
அழித்தவனே சிவ
மயமான மூர்த்தியே
ஞானபைரவனே
உயிர்வாழ்வு எமக்கு
உவந்தருள்பவனே
தயைபுரிவாய் ஐயா
தாளினை துதித்தோம்.

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு

## வீட்டுப் பணிப்பெண்கள்

| | | |
|---|---|---|
| இடம் | :- | சவுதி அராபியா. |
| வயது | :- | 30 வருடங்கள் முதல் 40 வருடங்கள். |
| சம்பளம் | :- | 6000 ரூபா. |
| பிரயாணம் | :- | இரண்டு வாரங்களுக்குள். |
| தேவையானவை | :- | பாஸ்போட், 6 பாஸ்போட் சைஸ் படங்கள். |

பணம் அறவிடப்படமாட்டாது. முற்றிலும் இலவசம். உப முகவர்களும் தொடர்பு கொள்ளலாம். அவர்களுக்கு சலுகைகள் வழங்கப்படும். ஆண்களுக்கும் வெற்றிடங்கள் உண்டு.

மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும் :-

**THUSHARA** TRAVELS AND TOURS (PVT) LTD.

*"FOREIGN EM -*
*PLOYMENT AGENT"*
*135 E 1/2, GALLE ROAD*
*DEHIWELA - SRI LANKA.*
*TEL : 730913*
*LABOUR LICENCE - 934*

துஷாரா ரவல்ஸ் அன்ட்
ரூர்ஸ் பிறைவேற் லிமிரெட்.
135 E 1/2 காலி வீதி,
தெகிவளை.
ரெலிபோன் : 730913.
அனுமதிப்பத்திர இல. 934.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org